

ம.பால்ராஜ்


Founder | International President

# LORDS TODAY


LORDS TODAY - International Social Media & Magazine
LORDS TODAY RNI Ref. No. 1287921 Title Code : TNBL04354 | Issue : May 2022
WhatsApp : 91-98405 59673 Editor | Publisher & Owner : Lords. M. PAULRAJ
Free for - LORDS | LIONS | ROTARY & All International Social Service CLUBS




2021- 16796675767



BIBLE 16



KURAN 16



BHAGAVAD GITA 16

LORDS
CLUBS INTERNATIONAL
Govt. Reg. No.:1359/2013
INTERNATIONAL SOCIAL SERVICES



# தலையங்கம்...

நீ கருவரைக்கு செல்லும் போது மட்டும்

யார் கண்களுக்கும் தெரியாத அணுக்களாய் இரு!

நீ கருவறையை விட்டு வெளியில் செல்லும்போது மட்டும்

உனது கண்கள் கலங்கி அழும் குழந்தைகளாய் இரு!

நீ பள்ளிகல்லூரிகளுக்கு செல்லும் போது மட்டும் மாண்புமிகு மாணவர்களாய் இரு!

நீ வேலைக்கு செல்லும்போது மட்டும் தொழிலாளிகளாய் இரு!

நீ பூமியில் அனைத்து நாடுகளிலும் உயிர் வாழும் போது ஒற்றுமையாய் மனிதநேய மிக்க மனிதர்களாய் இரு!

நீ பூமியில் லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் உறுப்பினர்களாகி பிற உயிரினங்களுக்கு உதவி செய்யும்போது கடவுள்களாய் இரு!

நீ இந்து கோவில்களுக்குள் செல்லும்போது மட்டும் இந்துக்களாய் இரு!

நீ கிருஸ்தவ தேவாலயங்களுக்கு செல்லும்போது மட்டும் கிறிஸ்தவர்களாய் இரு!

நீ இஸ்லாமிய மசூதிக்குகளுக்குள் செல்லும்போது மட்டும் இஸ்லாமியர்களாய் இரு!

நீ இறுதியாய் இறுதிப் பயணம் செல்லும்போது மட்டும் உன்னை சார்ந்தவர்களின் கண்களை கலங்க வைக்கும் அமைதியான பிணமாய் இரு!

நீ பின்னர் புதைக்கப்பட்டால் எலும்புகளாய் இரு!

நீ எரிக்கப்பட்டால் மீண்டும் அணுக்களை போன்று யார் கண்களுக்கும் தெரியாது சாம்பல் துகள்களாய் இரு!

ஆகவே அனைத்து உயிரினங்களும் அணுக்களாக தோன்றி அணுக்களாகவே மறையும் நிரந்தரமற்ற சில காலங்கள் மட்டுமே பூமியில் உயிர் வாழும் தற்காலிக உயிரினங்கள் தான் என்ற உண்மையை இந்த பூமியில் உள்ள அனைத்து மனிதர்களும் நன்கு உணர வேண்டும்.




லார்ட்ஸ் மபால்ராஜ்

**LORDS TODAY**
RNI Ref. No. : 1287921 Title Code : TNBL04354
International social media and magazine
Editor | Publisher | and Owner

**LORDS CLUBS INTERNATIONAL**
Govt. Reg. No. : 1359/2013
International social service clubs
International President | and Founder
Web : www.lordsclubs.com

# BIBLE

## மெகா தொடர்
PART-16




## தொடக்கநூல் அதிகாரம் 34 திருவிவிலியம்

### தீனாவுக்கு ஏற்பட்ட அவமானம்

1 யாக்கோபுக்கு லேயா பெற்றெடுத்த மகளான தீனா அந்நாட்டு மகளிரைப் பார்க்க வெளியே புறப்பட்டுப் போனாள்.

2 இவ்வியனான ஆமோரின் மகனும் அந்நாட்டின் தலைவனுமான செக்கேம் அவளைக் கண்டு தூக்கிச்சென்று அவளுடன் உறவு கொண்டு சிறுமைப்படுத்தினான்.

3 யாக்கோபின் மகள் தீனாவிடம் அவன் மனம் மேலும் ஈர்க்கப்பெற, அவன் அப்பெண்ணின்மேல் காதல் கொண்டு அவளது மனத்தைக் கவரும் முறையில் பேசினான்.

4 எனவே, செக்கேம் தன் தந்தை ஆமோரிடம், இந்தப் பெண்ணை எனக்கு மணமுடித்துவையுங்கள் என்று கூறினார்.

5 தம் மகள் தீனா தீட்டுப்படுத்தப்பட்டாள் என்று யாக்கோபு கேள்விப்பட்டபோது, அவருடைய புதல்வர் புல்வெளியில் மந்தைகளோடு இருந்தனர். எனவே, அவர்கள் திரும்பி வரும்வரை யாக்கோபு அமைதியாய் இருந்தார்.

6 செக்கேமின் தந்தை ஆமோர் யாக்கோபோடு பேச வந்தார்.

7 யாக்கோபின் புதல்வர் இதைப்பற்றிக் கேள்விப்பட்டுப் புல்வெளியிலிருந்து வந்தனர். அவர்கள் துயரமும் கடுஞ் சீற்றமும் கொண்டனர். ஏனெனில், யாக்கோபின் மகளுடன் உறவு கொண்டதால் செய்யத் தகாததைச் செய்து செக்கேம் இஸ்ரயேலை அவமானப்படுத்தினான் என்று நினைத்தனர்.

8 அப்பொழுது ஆமோர் அவர்களை நோக்கி, என் மகன் செக்கேமின் மனம் உங்கள் மகள்மீது ஈர்க்கப்பட்டுள்ளது. அவளை அவனுக்கு மணமுடித்துத் தாருங்கள்.

9 நீங்கள் எங்களோடு கலப்பு மணம் செய்துகொள்ளுங்கள். உங்கள் பெண்களை எங்களுக்குக் கொடுத்து எங்கள் பெண்களை உங்களுக்கு எடுத்துக் கொள்ளுங்கள்.

10 நீங்கள் எங்களோடு இந்நாட்டில் எங்கும் தங்கலாம். அதில் குடியிருந்து, வணிகம் செய்து, செல்வம் சேர்த்துக் கொள்ளுங்கள் என்றார்.

11 அப்பொழுது செக்கேம் தீனாவின் தந்தையையும், சகோதரர்களையும் நோக்கி, உங்கள் பார்வையில் எனக்குத் தயை கிடைக்கட்டும். நீங்கள் கேட்பதைத் தருவேன்.

12 பெண்ணுக்குரிய பணமும் பரிசமும் எவ்வளவு வேண்டுமானாலும் கேளுங்கள். நீங்கள் கேட்பதைத் தருவேன். பெண்ணை மட்டும் எனக்கு மணமுடித்துத் தாருங்கள் என்றான்.

13 யாக்கோபின் புதல்வர் தங்கள் சகோதரியைச் செக்கேம் தீட்டுப்படுத்தியதால், அவனையும் அவன் தந்தை ஆமோரையும் நோக்கிக் கபடமாய்க் கூறிய மறுமொழியாவது;

14 நீங்கள் கேட்டபடி செய்ய எங்களால் முடியாது. ஏனெனில், விருத்தசேதனம் செய்துகொள்ளாத ஆடவனுக்கு எங்கள் சகோதரியைக் கொடுப்பது அவமானமாகும்.

15 ஆனால், நீங்களும் உங்களுள் ஆண்மக்கள் யாவரும் விருத்தசேதனம் செய்து கொண்டால் மட்டும்

16 எங்கள் பெண்களை உங்களுக்குக் கொடுத்து உங்கள் பெண்களை எங்களுக்கு எடுத்துக்கொள்வோம். உங்களிடையே வாழ்ந்து ஓரினமாக ஆவோம்.

17 எங்கள் சொற்படி நீங்கள் விருத்தசேதனம் செய்துகொள்ள இசையாவிட்டால் நாங்கள் எங்கள் பெண்ணை அழைத்துக் கொண்டு போய்விடுவோம் என்றனர்.

18 அவர்கள் சொன்னது ஆமோருக்கும் அவன் மகன் செக்கேமுக்கும் நலமாகத் தோன்றியது.

# BIBLE




19 அந்த இளைஞன் யாக்கோபின் மகள்மீது கொண்ட காதலினால் அவர்கள் சொன்னதை நிறைவேற்றுவதில் காலம் தாழ்த்தவில்லை. மேலும், அவன் தன் தந்தை வீட்டார் அனைவரிடையிலும் பெருமதிப்புக்குரியவனாய் இருந்தான்.

20 எனவே, ஆமோரும் அவன் மகன் செக்கேமும் தம் நகரவாயிலுக்கு வந்து மக்களை நோக்கி,

21 இந்த மனிதர்கள் நம்முடன் நட்புறவு கொள்பவர்கள். ஆகவே, நம் நாட்டில் குடியிருந்து வணிகம் செய்யட்டும். அவர்கள் வாழ்வதற்கு நம் நாட்டில் நிறைய நிலம் இருக்கிறது. அவர்களிடம் பெண் எடுத்து, அவர்களுக்குப் பெண் கொடுப்போம்.

22 ஆனால், இவர்கள், தாங்கள் செய்து கொண்டது போல, நம் ஆண்கள் அனைவரும் விருத்தசேதனம் செய்துகொண்டால் மட்டும் நம்முடன் ஒரே இனமாகச் சேர்ந்து வாழ இசைவு தருகிறார்கள்.

23 அப்படிச் செய்தால் அவர்களுடைய மந்தைகள், சொத்துக்கள், அனைத்துக் கால்நடைகள் ஆகியன நமக்குரியன ஆகுமன்றோ! எனவே, நாம் அவர்களுக்கு ஒப்புதல் கொடுப்போம். அவர்களும் நம்முடன் குடியிருக்கட்டும் என்றார்கள்.

24 ஆகவே, நகரவாயிலுக்கு வெளியே வந்த அனைவரும் ஆமோரும் அவன் மகன் செக்கேமும் கூறியதை ஏற்றுக் கொண்டனர். நகரிலிருந்த அனைத்து ஆண்களும் செய்து கொண்டனர்.

25 மூன்றாம் நாளன்று அவர்கள் அனைவரும் வலியால் வருந்தியபோது, யாக்கோபின் புதல்வர்களும் தீனாவின் சகோதரர்களுமான சிமியோன், லேவி என்னும் இருவரும் அவரவர் வாளை எடுத்துக் கொண்டு, சந்தேகம் எழாதபடி நகருக்குள் புகுந்து அனைத்து ஆண்களையும் வெட்டி வீழ்த்தினர்.

26 அவர்கள் ஆமோரையும், அவன் மகன் செக்கேமையும் வாளினால் வெட்டி வீழ்த்தியபின் தீனாவை செக்கேம் வீட்டினின்று அழைத்துக் கொண்டு போய்விட்டார்கள்.

27 அதன்பின் யாக்கோபின் புதல்வர்கள் வந்து, வெட்டுண்டவர்களின் சடலத்தின் மீது மிதித்துச் சென்று தங்கள் சகோதரியைத் தீட்டுப்படுத்திய அந்நகரைக் கொள்ளையிட்டனர்.

28 நகரிலும் வெளிப்புறத்திலும் இருந்த அவர்களுடைய ஆடு, மாடு, கழுதைகளைக் கைப்பற்றினர்.

29 அவர்களுடைய எல்லாச் செல்வங்களையும் எடுத்துக் கொண்டு, எல்லாக் குழந்தைகள் பெண்டிரையும் கைதிகளாக்கி, வீடுகளிலிருந்த அனைத்தையும் கொள்ளையடித்தனர்.

30 யாக்கோபு சிமியோனையும் லேவியையும் நோக்கி, நீங்கள் என்னைத் தொல்லைக்கு உட்படுத்திவிட்டீர்கள். இந்நாட்டில் வாழ்வோரிடத்திலும் கானானியரிடத்திலும் பெரிசியரிடத்திலும் என்னை இழிவுப்படுத்திவிட்டீர்கள். என்னிடமோ சில ஆள்களே உள்ளனர். அவர்கள் ஒன்று சேர்ந்து என்னைத் தாக்கினால் நானும் என் குடும்பத்தாரும் அழிந்து போவோம் என்றார்.

31 அதற்கு, அவன் மட்டும் எங்கள் சகோதரியை ஒரு விலைமாதைப் போல நடத்தலாமோ? என்று அவர்கள் மறுமொழி கூறினர்.


## தொடக்கநூல் அதிகாரம் 35 திருவிவிலியம்

### திருவிவிலியம் பெத்தேலில் கடவுள் யாக்கோபுக்கு ஆசி வழங்குதல்

1 அப்பொழுது கடவுள் யாக்கோபை நோக்கி, நீ எழுந்து பெத்தேலுக்குப் போய் அங்கே குடியிரு. உன் சகோதரன் ஏசாவிடமிருந்து தப்பியோடியபோது உனக்குத் தோன்றின இறைவனுக்கு அவ்விடத்தில் ஒரு பலிபீடத்தை எழுப்பு என்றார்.

2 யாக்கோபு தம் வீட்டாரையும் அவரோடிருந்த அனைவரையும் நோக்கி, உங்களிடம் உள்ள வேற்றுத் தெய்வங்களின் சிலைகளை அகற்றிவிட்டு உங்களைத் தூய்மைப்படுத்தி, உங்கள் உடைகளை மாற்றிக் கொள்ளுங்கள்.

# BIBLE




3 எழுந்து வாருங்கள்; பெத்தேலுக்குச் செல்வோம். அங்கே, என் துன்ப நாளில் என் மன்றாட்டைக் கேட்டருளி நான் சென்றவிடமெல்லாம் எனக்கு வழித் துணையாய் இருந்த இறைவனுக்கு ஒரு பலிபீடத்தை எழுப்புவேன் என்றார்.

4 அப்படியே அவர்கள் தங்களிடமிருந்த எல்லா வேற்றுத் தெய்வங்களின் சிலைகளையும் தங்கள் காதணிகளையும் யாக்கோபின் கையில் கொடுக்க, அவர் அவற்றைச் செக்கேம் அருகிலிருந்த ஒரு கருவாலி மரத்தின் அருகே புதைத்தார்.

5 அவர்கள் புறப்பட்டுச் சென்றபொழுது, அவர்களைச் சூழ்ந்திருந்த எல்லா நகரத்தினருக்கும் கடவுள் திகிலூட்டினார். எனவே, அவர்கள் யாக்கோபின் புதல்வரைத் துரத்திச் செல்லவில்லை.

6 இவ்வாறு, யாக்கோபும் அவரோடிருந்த எல்லா மக்களும் கானான் நாட்டிலுள்ள லூசு என்ற பெத்தேலுக்கு வந்து சேர்ந்தனர்.

7 யாக்கோபு அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டி எழுப்பித் தம் சகோதரனிடமிருந்து தப்பி ஓடினபொழுது, கடவுள் தம்மை அங்கே அவருக்கு வெளிப்படுத்தியதால், அந்த இடத்திற்கு ஏல்-பெத்தேல் என்று பெயரிட்டார்.

8 அப்பொழுது ரெபேக்காவின் பணிப்பெண்ணாகிய தெபோரா இறந்தாள். பெத்தேலின் அடிவாரத்திலிருந்த ஒரு கருவாலி மரத்தடியில் அவள் அடக்கம் செய்யப்பட்டாள். எனவே. அவ்விடத்திற்கு அல்லோன்-பாகூத்து மீ என்னும் பெயர் வழங்கலாயிற்று.

9 யாக்கோபு பதான்-அராமிலிருந்து திரும்பி வந்தபின் கடவுள் மீண்டும் அவருக்குத் தோன்றி, ஆசி வழங்கினார்.

10 கடவுள் அவரை நோக்கி, உன் பெயர் யாக்கோபு. இனிமேல் நீ யாக்கோபு என்று அழைக்கப்படமாட்டாய்; உன் பெயர் இஸ்ரயேல் எனப்படும் என்றுரைத்து இஸ்ரயேல் என்று அவருக்குப் பெயரிட்டார்.

11 மேலும், கடவுள் அவரை நோக்கி, நானே எல்லாம் வல்ல இறைவன். நீ பலுகிப் பெருகக்கடவாய். ஓரினமும் மக்களினங்களின் கூட்டமும் உன்னிடமிருந்து தோன்றும். அரசர்களும் உன் வழிமரபில் உதிப்பார்கள்.

12 ஆபிரகாம், ஈசாக்குக்கு நான் அளித்த நாட்டை உனக்கும் உனக்குப்பின் உன்வழி மரபினருக்கும் கொடுப்பேன் என்றார்.

13 பின்னர், கடவுள் அவரோடு பேசிய இடத்தினின்று மேலெழும்பிச் சென்றார்.

14 யாக்கோபு தம்மோடு கடவுள் பேசிய அந்த இடத்தில் ஒரு கல்தூணை நினைவுத் தூணாக நாட்டி, அதன் மேல் நீர்மப் பலியையும் எண்ணெயையும் வார்த்தார்.

15 யாக்கோபு தம்மோடு கடவுள் பேசிய அந்த இடத்திற்குப் பெத்தேல் மீ என்று பெயரிட்டார். ராகேலின் இறப்பு

16 பின்பு, அவர்கள் பெத்தேலைவிட்டுப் புறப்பட்டனர். எப்ராத்திற்குச் சற்றுத் தொலைவில் அவர்கள் இருந்தபொழுது, அங்கே ராகேலுக்குப் பேறுகாலம் வந்தது. அப்பொழுது அவர் மிகவும் வேதனைப்பட்டார்.

17 பேறுகால வேதனையால் அவர் துடித்துக் கொண்டிருக்கையில், மருத்துவப் பெண் அவரை நோக்கி, அஞ்சாதே! உனக்கு இன்னொரு மகன் பிறந்துள்ளான்! என்றாள்.

18 அவர் சாகக்கிடந்து உயிர்பிரியும் வேளையில் அவனுக்குப் பென்-ஓனி மீ என்று பெயரிட்டார். அவன் தந்தையோ அவனைப் பென்யமின் மீ என்று அழைத்தார்.

19 இவ்வாறு ராகேல் இறந்துபோக, பெத்லகேம் என்ற எப்ராத்திற்குச் செல்லும் வழியில் அடக்கம் செய்யப்பட்டார்.

20 யாக்கோபு அவருடைய கல்லறையின் மேல் ஒரு நினைவுத்தூணை நாட்டிவைத்தார். இன்றுவரை அது ராகேலின் கல்லறைக்கு நினைவுத்தூணாக இருக்கின்றது.

# BIBLE




21 மீண்டும், இஸ்ரயேல் அங்கிருந்து புறப்பட்டு மிக்தால் ஏதேருக்கு அப்பால் கூடாரம் அடித்தார்.

22 இஸ்ரயேல் அந்நிலப்பகுதியில் குடியிருந்தபொழுது, ரூபன் தன் தந்தையின் மறுமனைவியாகிய பிலகாவுடன் உடலுறவு கொண்டான். இஸ்ரயேல் அதைக் கேள்விப்பட்டார். யாக்கோபின் புதல்வர்கள் பன்னிருவரின் பெயர்களாவன:

23 லேயாவின் புதல்வர்கள்; யாக்கோபின் தலைமகன் ரூபன், சிமியோன், லேவி, யூதா, இசக்கார், செபுலோன்.

24 ராகேலின் புதல்வர்கள்; யோசேப்பு, பென்யமின்.

25 ராகேலின் பணிப்பெண் பிலகாவின் புதல்வர்கள்; தாண், நப்தலி.

26 லேயாவின் பணிப்பெண் சில்பாவின் புதல்வர்கள்; காத்து, ஆசேர். இவர்கள் யாக்கோபுக்கு பதான் அராமில் பிறந்தவர்கள். ஈசாக்கின் இறப்பு

27 ஆபிரகாமும், ஈசாக்கும் வாழ்ந்த இடம் கிரியத்து அர்பா என்ற எபிரோன் ஆகும்.யாக்கோபு தம் தந்தை ஈசாக்கிடம் மம்ரே என்னும் கிரியத்து அர்பாவுக்கு வந்தார். அதுவே ஆபிரகாமும் ஈசாக்கும் குடியிருந்த எபிரோன் ஆகும்.

28 ஈசாக்கு நூற்றெண்பது ஆண்டுகள் வாழ்ந்தார்.

29 அவர் வயது முதிர்ந்தவராய் இறந்து, தம் மூதாதையருடன் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அவர் புதல்வர்கள் ஏசாவும் யாக்கோபும் அவரை அடக்கம் செய்தனர்.

## தொடக்கநூல் அதிகாரம் 36 திருவிவிலியம்

திருவிவிலியம் ஏசாவின் வழிமரபினர் (1 குறி 1:34-37)

1 ஏதோம் என்ற ஏசாவின் தலைமுறை அட்டவணை இதுவே.

2 ஏசா கானான் நாட்டுப் பெண்களில் இத்தியன் ஏலோனின் மகள் ஆதாவையும் இவ்வியன் சிபெயோனின் மகளான அனாவின் மகள் ஒகோலிபாமாவையும்,

3 இஸ்மயேலின் மகளும் நெபாயோத்தின் சகோதரியுமான பாசமத்தையும் மணந்து கொண்டார்.

4 ஏசாவுக்கு ஆதா எலிப்பாசைப் பெற்றெடுத்தாள். பாசமத்து இரகுவேலைப் பெற்றெடுத்தாள்.

5 ஒகோலி பாமா எயூசு, யாலாம், கோராகு ஆகியோரைப் பெற்றெடுத்தாள். இவர்கள் ஏசாவுக்குக் கானான் நாட்டில் பிறந்த புதல்வர்கள்.

6 பின்னர், ஏசா தம் மனைவியர், புதல்வர், புதல்வியர், தம் வீட்டைச் சேர்ந்தவர் எல்லோரையும் அழைத்துக் கொண்டு, தம் மந்தைகள், கால்நடைகள், கானான் நாட்டில் சேர்த்திருந்த உடைமைகள் யாவற்றோடும் தம் சகோதரன் யாக்கோபை விட்டுப் பிரிந்து வேறு நாட்டிற்குப் போனார்.

7 ஏனெனில், அவர்கள் இருவரும் சேர்ந்து வாழ முடியாத அளவு அவர்களுடைய உடைமைகள் பெருகிவிட்டன. அவர்கள் தங்கியிருந்த நிலம் அவர்களுடைய மந்தைகளுக்குப் போதாதிருந்தது.


8 ஆகையால், ஏசா என்ற ஏதோம் சேயிர் என்ற மலைநாட்டிற்குச் சென்று குடியேறினார்.

9 சேயிர் மலைநாட்டில் வாழும் ஏதோமியரின் மூதாதையாகிய ஏசாவின் தலைமுறை அட்டவணை இதுவே.

10 ஏசாவின் புதல்வர்கள் பெயர்களாவன; ஏசாவின் மனைவி ஆதாவின் மகன் எலிப்பாசு, அவருடைய இரண்டாம் மனைவியான பாசமத்தின் மகன் இரகுவேல்.

11 எலிப்பாசின் புதல்வர்கள்; தேமான், ஓமார், செப்போ, காத்தாம், கெனாசு.

# BIBLE




12 ஏசாவின் மகன் எலிப்பாசின் மறுமனைவி திம்னா எலிப்பாசுக்கு அமலேக்கைப் பெற்றெடுத்தாள். இவர்களே ஏசாவின் மனைவி ஆதாவின் பேரப் பிள்ளைகள்.

13 இரகுவேலின் புதல்வர்கள்; நகத்து, செராகு, சம்மா, மிசா. இவர்களே ஏசாவின் மனைவி பாசமத்தின் பேரப்பிள்ளைகள்.

14 சிபயோனின் மகளான அனாவின் மகள் ஒகோலிபாமா ஏசாவுக்குப் பெற்றெடுத்த புதல்வர்கள்; எயுசு, யாலாம், கோராகு.

15 ஏசாவின் புதல்வர்களுள் தலைவர்களாய் இருந்தவர்கள்; ஏசாவின் தலைமகன் எலிப்பாசின் புதல்வர்களான தேமான், ஓமார், செப்போ, கெனாசு.

16 கோராகு, காத்தாம், அமலேக்கு ஆகிய இவர்கள் அனைவரும் எலிப்பாசுக்குப் பிறந்த ஏதோம் நாட்டுத் தலைவர்கள். இவர்களே ஆதாவின் பேரப்பிள்ளைகள்.

17 ஏசாவின் மகன் இரகுவேலின் புதல்வர்களுள் தலைவர்களாயிருந்தவர்கள்; நகத்து, செராகு, சம்மா, மிசா. இவர்களே இரகுவேலின் புதல்வர்கள், ஏசாவின் மனைவி பாசுமத்தின் பேரப்பிள்ளைகள். இவர்கள் இரகுவேலின் வழிவந்த ஏதோம் நாட்டுத் தலைவர்கள்.

18 ஏசாவின் மனைவி ஒகோலிபாமாவின் புதல்வர்களுள் தலைவர்களாய் இருந்தவர்கள்; எயுசு, யாலாம், கோராகு. இவர்கள் அனாவின் மகளும் ஏசாவின் மனைவியுமான ஒகோலிபாமா வழிவந்த தலைவர்கள்.

19 இவர்களே ஏதோம் எனப்பட்ட ஏசாவின் புதல்வர்களும், அந்த இனத்தின் தலைவர்களும் ஆவர். சேயிரின் வழிமரபினர் (1 குறி 1:38-42)

20 அந்த நாட்டில் குடியிருந்த ஓரியனான சேயிரின் புதல்வர்கள்; லோத்தான், சோபால், சிபயோன், அனா,

21 தீசோன், ஏட்சேர், தீசான். இவர்களே ஏதோம் நாட்டிலிருந்த சேயிரின் மக்களாகிய ஓரியரின் தலைவர்கள்.

22 லோத்தானின் புதல்வர்கள் இவர்களே; ஓரி, ஏமாம். லோத்தானின் சகோதரி திம்னா.

23 சோபாலின் புதல்வர்கள் இவர்களே; அல்வான், மானகத்து, ஏபால், செப்போ, ஓனாம்.

24 சிபயோனின் புதல்வர்கள் இவர்களே; அய்யா, அனா. இந்த அனா தன் தந்தை சிபயோனின் கழுதைகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது பாலை நிலத்தில் வெப்ப நீரூற்றுகளைக் கண்டுபிடித்தான்.

25 அனாவின் மகன் தீசோன்; அனாவின் மகள் ஒகோலிபாமா. 26தீசானின் புதல்வர்கள் இவர்களே; எம்தான், எஸ்பான், இத்ரான், கெரான்.

27 ஏட்சேரின் புதல்வர்கள் இவர்களே; பில்கான், சகவான், ஆக்கான். 28தீசோனின் புதல்வர்கள் இவர்களே; ஊசு, ஆரான்.

29 ஓரியனின் தலைவர்கள் இவர்களே; லோத்தான், சோபால், சிபயோன், அனா,

30 தீசோன், ஏட்சேர், தீசான். இவர்கள் சேயிர் நாட்டின் குலப்பிரிவுகளுக்கு ஏற்ப ஓரியரின் தலைவர்களாய் இருந்தவர்கள். ஏதோமின் வழிமரபினர் (1 குறி 1:43-54)

31 இஸ்ரயேலரிடையே முடியாட்சி தொடங்குமுன்னரே ஏதோமில் ஆட்சிபுரிந்த மன்னர்கள் இவர்களே.

32 பெகோரின் மகன் பேலா ஏதோமில் ஆட்சி புரிந்தான். அவனது நகரின் பெயர் தின்காபா.

33 பேலா இறந்தபின் போஸ்ராவைச் சார்ந்த செராகின் மகன் யோபாபு ஆட்சிக்கு வந்தான்.

34 யோபாபு இறந்தபின் தேமானியரின் நாட்டைச் சேர்ந்த ஊசாம் ஆட்சிக்கு வந்தான்.

35 ஊசாம் இறந்தபின் பெதாதின் மகன் அதாது ஆட்சிக்கு வந்தான். இவன் மோவாபு நாட்டில் மிதியானியரைத் தோற்கடித்தவன். அவனது நகரின் பெயர் அவீத்து.

36 அதாது இறந்தபின், மஸ்ரேக்காவைச் சார்ந்த சம்லா ஆட்சிக்கு வந்தான்.

# BIBLE




37 சம்லா இறந்தபின் யூப்பிரத்தீசு நதிக்கருகில் இருந்த இரகபோத்தைச் சார்ந்த சாவூல் ஆட்சிக்கு வந்தான்.

38 சாவூல் இறந்தபின், அக்போரின் மகன் பாகால் அனான் ஆட்சிக்கு வந்தான்.


39 பாகால் அனான் இறந்தபின், அதார் ஆட்சிக்கு வந்தான். அவனது நகரின் பெயர் பாகூ. அவன் மனைவியின் பெயர் மெகேற்றபேல். அவள் மேசகாபின் மகளான மத்ரேத்தின் மகள்.


40 தங்கள் குலப்பிரிவின்படியும், நிலப்பகுதிகளின்படியும் ஏசாவின் வழிவந்த தலைவர்களின் பெயர்கள் இவைகளே; திம்னா, ஆல்வா, எத்தேத்து.

41 ஒகோலிபாமா, ஏலா, பினோன்,

42 கெனாசு, தேமான், மிபுசார், 43மக்தியேல், ஈராம். ஏதோமியர் உரிமையாகக் கொண்டு குடியேறி வாழ்ந்த நிலப்பகுதிகளின்படி தலைவர்களாய் இருந்தவர்கள் இவர்களே. இந்த ஏதோமியரின் மூதாதைதான் ஏசா.

தொடரும்.....







2:249 وَمَنْ لَّمْ يَطْعَمْهُ فَاِنَّهٗ فَمَنْ شَرِبَ مِنْهُ فَلَيْسَ مِنِّىْ فَلَمَّا فَصَلَ طَالُوْتُ بِالْجُنُوْدِ قَالَ اِنَّ اللّٰهَ مُبْتَلِيْكُمْ بِنَهَرٍ
قَالُوْا لَا فَلَمَّا جَاوَزَهٗ هُوَ وَالَّذِيْنَ اٰمَنُوْا مَعَهٗ فَشَرِبُوْا مِنْهُ اِلَّا قَلِيْلًا مِّنْهُمْ مِنِّىْٓ اِلَّا مَنِ اغْتَرَفَ غُرْفَةً ۢ بِيَدِهٖ
اللّٰهِ قَالَ الَّذِيْنَ يَظُنُّوْنَ اَنَّهُمْ مُّلٰقُوا اللّٰهِ كَمْ مِّنْ فِئَةٍ قَلِيْلَةٍ غَلَبَتْ فِئَةً كَثِيْرَةًۢ بِاِذْنِنَا الْيَوْمَ بِجَالُوْتَ وَجُنُوْدِهٖ طَاقَةَ
وَاللّٰهُ مَعَ الصّٰبِرِيْنَ

2:249. பின்னர், தாலூத் படைகளுடன் புறப்பட்ட போது அவர் "நிச்சயமாக அல்லாஹ் உங்களை (வழியில்) ஓர் ஆற்றைக் கொண்டு சோதிப்பான்; யார் அதிலிருந்து (நீர்) அருந்துகின்றாரோ அவர் என்னைச் சேர்ந்தவரல்லர்; தவிர, ஒரு சிறங்கைத் தண்ணீர் தவிர யார் அதில் நின்றும் (அதிகமாக) நீர் அருந்தவில்லையோ நிச்சயமாக அவர் என்னைச் சார்ந்தவர்" என்று கூறினார் அவர்களில் ஒரு சிலரைத் தவிர (பெரும்பாலோர்) அதிலிருந்து (அதிகமாக நீர்) அருந்தினார்கள்; பின்னர் தாலூத்தும், அவருடன் ஈமான் கொண்டோரும் ஆற்றைக் கடந்ததும், (ஒரு சிறங்கைக்கும் அதிகமாக நீர் அருந்தியோர்) "ஜாலூத்துடனும், அவன் படைகளுடனும் இன்று போர் செய்வதற்கு எங்களுக்கு வலுவில்லை" என்று கூறிவிட்டனர்; ஆனால், நாம் நிச்சயமாக அல்லாஹ்வைச் சந்திப்போம் என்று உறுதி கொண்டிருந்தோர், "எத்தனையோ சிறு கூட்டத்தார்கள், பெருங் கூட்டத்தாரை அல்லாஹ்வின் (அருள் மிக்க) அனுமதி கொண்டு வென்றிருக்கின்றார்கள்; மேலும் அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான்" என்று கூறினார்கள்.

2:250 ا عَلَى الْقَوْمِ وَلَمَّا بَرَزُوْا لِجَالُوْتَ وَجُنُوْدِهٖ قَالُوْا رَبَّنَآ اَفْرِغْ عَلَيْنَا صَبْرًا وَّثَبِّتْ اَقْدَامَنَا وَانْصُرْنَ
الْكٰفِرِيْنَ

2:250. மேலும், ஜாலூத்தையும், அவன் படைகளையும் (களத்தில் சந்திக்க) அவர்கள் முன்னேறிச் சென்ற போது, "எங்கள் இறைவா! எங்களுக்குப் பொறுமையைத் தந்தருள்வாயாக! எங்கள் பாதங்களை உறுதியாக்குவாயாக! கா∴பிரான இம்மக்கள் மீது (நாங்கள் வெற்றியடைய) உதவி செய்வாயாக!" எனக் கூறி(ப் பிரார்த்தனை செய்த)னர்.



وَلَوْلَا دَفْعُ ۗ وَقَتَلَ دَاوٗدُ جَالُوْتَ وَاٰتٰىهُ اللّٰهُ الْمُلْكَ وَالْحِكْمَةَ وَعَلَّمَهٗ مِمَّا يَشَآءُ فَهَزَمُوْهُمْ بِاِذْنِ اللّٰهِ 2:251
لْاَرْضُ وَلٰـكِنَّ اللّٰهَ ذُوْ فَضْلٍ عَلَى الْعٰلَمِيْنَاللّٰهِ النَّاسَ بَعْضَهُمْ بِبَعْضٍ لَّفَسَدَتِ ا

2:251. இவ்வாறு இவர்கள் அல்லாஹ்வின் (அருள் மிக்க) அனுமதி கொண்டு ஜாலூத்தின் படையை முறியடித்தார்கள்; தாவூது ஜாலூத்தைக் கொன்றார்; அல்லாஹ் (தாவூதுக்கு) அரசுரிமையையும், ஞானத்தையும் கொடுத்தான்; தான் விரும்பியவற்றையெல்லாம் அவருக்குக் கற்பித்தான்; (இவ்விதமாக)அல்லாஹ் மக்களில் (நன்மை செய்யும்) ஒரு கூட்டத்தினரைக் கொண்டு, (தீமை செய்யும்) மற்றொரு கூட்டத்தினரைத் தடுக்காவிட்டால், (உலகம் சீர்கெட்டிருக்கும்.) ஆயினும், நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தார் மீது பெருங்கருணையுடையோனாக இருக்கிறான்.


وَاِنَّكَ لَمِنَ الْمُرْسَلِيْنَتِلْكَ اٰيٰتُ اللّٰهِ نَتْلُوْهَا عَلَيْكَ بِالْحَـقِّ 2:252

2:252. (நபியே!) இவை அல்லாஹ்வின் வசனங்களாகும்; இவற்றை நாம் உண்மையைக் கொண்டு உமக்கு ஓதிக் காண்பிக்கின்றோம்; நிச்சயமாக நீர் (நம்மால் அனுப்பப்பட்ட) தூதர்களில் ஒருவர் தாம்.

**ஜுஸ்வு : 3**

وَاٰتَيْنَا عِيْسَى ابْنَ وَرَفَعَ بَعْضَهُمْ دَرَجٰتٍ ‌ مِنْهُمْ مَّنْ كَلَّمَ اللّٰهُتِلْكَ الرُّسُلُ فَضَّلْنَا بَعْضَهُمْ عَلٰى بَعْضٍ 2:253
وَلَوْ شَآءَ اللّٰهُ مَا اقْتَتَلَ الَّذِيْنَ مِنْ بَعْدِهِمْ مِّنْۢ بَعْدِ مَا جَآءَتْهُمُ الْبَيِّنٰتُ وَلٰـكِنِالْبَيِّنٰتِ وَاَيَّدْنٰهُ بِرُوْحِ الْقُدُسِ مَرْيَمَ
وَلٰـكِنَّ اللّٰهَ يَفْعَلُ مَا يُرِيْدُ فَتَنَلُوْا وَلَوْ شَآءَ اللّٰهُ مَا اخْتَلَفُوْا فَمِنْهُمْ مَّنْ اٰمَنَ وَمِنْهُمْ مَّنْ كَفَرَ

2:253. அத்தூதர்கள் - அவர்களில் சிலரைச் சிலரைவிட நாம் மேன்மையாக்கி இருக்கின்றோம்; அவர்களில் சிலருடன் அல்லாஹ் பேசியிருக்கின்றான்; அவர்களில் சிலரைப் பதவிகளில் உயர்த்தியும் இருக்கின்றான்; தவிர மர்யமுடைய மகன் ஈஸாவுக்கு நாம் தெளிவான அத்தாட்சிகளைக் கொடுத்தோம்; இன்னும், ரூஹுல் குதுஸி (எனும் பரிசுத்த ஆத்மாவைக்) கொண்டு அவருக்கு உதவி செய்தோம்; அல்லாஹ் நாடியிருந்தால், தங்களிடம் தெளிவான அத்தாட்சிகள் வந்த பின்னரும், அத்தூதுவர்களுக்குப்பின்




வந்த மக்கள் (தங்களுக்குள்) சண்டை செய்து கொண்டிருக்க மாட்டார்கள்; ஆனால் அவர்கள் வேறுபாடுகள் கொண்டனர்; அவர்களில் ஈமான் கொண்டோரும் உள்ளனர்; அவர்களில் நிராகரித்தோரும் (காஃபிரானோரும்) உள்ளனர்; அல்லாஹ் நாடியிருந்தால் அவர்கள் (இவ்வாறு) சண்டை செய்து கொண்டிருக்க மாட்டார்கள்; ஆனால் அல்லாஹ் தான் நாடியவற்றைச் செய்கின்றான்.

2:254 وَلَا خُلَّةٌ وَّلَا شَفَاعَةٌ ۗ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اَنْفِقُوْا مِمَّا رَزَقْنٰكُمْ مِّنْ قَبْلِ اَنْ يَّاْتِىَ يَوْمٌ لَّا بَيْعٌ فِيْهِ
وَالْكٰفِرُوْنَ هُمُ الظّٰلِمُوْنَ

2:254. நம்பிக்கை கொண்டோரே! பேரங்களும், நட்புறவுகளும், பரிந்துரைகளும் இல்லாத அந்த(இறுதித் தீர்ப்பு) நாள் வருவதற்கு முன்னர், நாம் உங்களுக்கு அளித்தவற்றிலிருந்து (நல்வழிகளில்) செலவு செய்யுங்கள்; இன்னும், காஃபிர்களாக இருக்கின்றார்களே அவர்கள் தாம் அநியாயக்காரர்கள்.

2:255 مَنْ ذَا لَهٗ مَا فِى السَّمٰوٰتِ وَمَا فِى الْاَرْضِ ۗ لَا تَاْخُذُهٗ سِنَةٌ وَّلَا نَوْمٌ ۚ اَللّٰهُ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ الْحَىُّ الْقَيُّوْمُ
وَلَا يُحِيْطُوْنَ بِشَىْءٍ مِّنْ عِلْمِهٖۤ اِلَّا بِمَا شَآءَ ۚ وَسِعَ يَعْلَمُ مَا بَيْنَ اَيْدِيْهِمْ وَمَا خَلْفَهُمْ ۚ الَّذِىْ يَشْفَعُ عِنْدَهٗۤ اِلَّا بِاِذْنِهٖ
وَهُوَ الْعَلِىُّ الْعَظِيْمُ ۚ وَلَا يَـُٔوْدُهٗ حِفْظُهُمَا ۚ كُرْسِيُّهُ السَّمٰوٰتِ وَالْاَرْضَ

2:255. அல்லாஹ்-அவனைத்தவிர (வணக்கத்திற்குரிய) நாயன் வேறு இல்லை; அவன் என்றென்றும் ஜீவித்திருப்பவன்; என்றென்றும் நிலைத்திருப்பவன்; அவனை அரி துயிலோ, உறக்கமோ பீடிக்கா; வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அவனுக்கே உரியன; அவன் அனுமதியின்றி அவனிடம் யார் பரிந்துரை செய்ய முடியும்? (படைப்பினங்களுக்கு) முன்னருள்ளவற்றையும், அவற்றுக்குப் பின்னருள்ளவற்றையும் அவன் நன்கறிவான்; அவன் ஞானத்திலிருந்து எதனையும், அவன் நாட்டமின்றி, எவரும் அறிந்துகொள்ள முடியாது; அவனுடைய அரியாசனம் (குர்ஸிய்யு) வானங்களிலும், பூமியிலும் பரந்து நிற்கின்றது; அவ்விரண்டையும் காப்பது அவனுக்குச்




சிரமத்தை உண்டாக்குவதில்லை - அவன் மிக உயர்ந்தவன்; மகிமை மிக்கவன்.

اسْتَمْسَكَ فَمَنْ يَّكْفُرْ بِالطَّاغُوْتِ وَيُؤْمِنْۢ بِاللّٰهِ فَقَدْ تَّبَيَّنَ الرُّشْدُ مِنَ الْغَيِّ ☐ لَآ اِكْرَاهَ فِى الدِّيْنِ 2:256
ۗ وَاللّٰهُ سَمِيْعٌ عَلِيْمٌ لَا انْفِصَامَ لَهَا ـ بِالْعُرْوَةِ الْوُثْقٰى


2:256. (இஸ்லாமிய) மார்க்கத்தில் (எவ்வகையான) நிர்ப்பந்தமுமில்லை; வழிகேட்டிலிருந்து நேர்வழி முற்றிலும் (பிரிந்து) தெளிவாகிவிட்டது; ஆகையால், எவர் வழி கெடுப்பவற்றை நிராகரித்து அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறாரோ அவர் அறுந்து விடாத கெட்டியான கயிற்றை நிச்சயமாகப் பற்றிக் கொண்டார் - அல்லாஹ்(யாவற்றையும்) செவியுறுவோனாகவும் நன்கறிவோனாகவும் இருக்கின்றான்.

وَالَّذِيْنَ كَفَرُوْٓا اَوْلِيٰٓــــٔـهُمُ الطَّاغُوْتُ ۙ ☐اللّٰهُ وَلِيُّ الَّذِيْنَ اٰمَنُوْا يُخْرِجُهُمْ مِّنَ الظُّلُمٰتِ اِلَى النُّوْرِ 2:257
☐دُوْنَ هُمْ فِيْهَا خٰلِدُ اُولٰٓئِكَ اَصْحٰبُ النَّارِ يُخْرِجُوْنَهُمْ مِّنَ النُّوْرِ اِلَى الظُّلُمٰتِ

2:257. அல்லாஹ்வே நம்பிக்கை கொண்டவர்களின் பாதுகாவலன் (ஆவான்); அவன் அவர்களை இருள்களிலிருந்து வெளிச்சத்தின் பக்கம் கொண்டு வருகின்றான்; ஆனால் நிராகரிப்பவர்களுக்கோ - (வழி கெடுக்கும்) ஷைத்தான்கள் தாம் அவர்களின் பாது காவலர்கள்; அவை அவர்களை வெளிச்சத்திலிருந்து இருள்களின் பக்கம் கொண்டு வருகின்றன; அவர்களே நரகவாசிகள்; அவர்கள் அதில் என்றென்றும் இருப்பர்.

رَبِّيَ الَّذِىْ يُحْىٖ وَيُمِيْتُ قَالَ اَنَا اِذْ قَالَ اِبْرٰهٖمُ اَلَمْ تَرَ اِلَى الَّذِىْ حَآجَّ اِبْرٰهٖمَ فِىْ رَبِّهٖٓ اَنْ اٰتٰىهُ اللّٰهُ الْمُلْكَ 2:258
وَاللّٰهُ لَا قَالَ اِبْرٰهٖمُ فَاِنَّ اللّٰهَ يَأْتِىْ بِالشَّمْسِ مِنَ الْمَشْرِقِ فَأْتِ بِهَا مِنَ الْمَغْرِبِ فَبُهِتَ الَّذِىْ كَفَاُحْىٖ وَاُمِيْتُ
يَهْدِى الْقَوْمَ الظّٰلِمِيْنَ

2:258. அல்லாஹ் தனக்கு அரசாட்சி கொடுத்ததின் காரணமாக (ஆணவங்கொண்டு), இப்ராஹீமிடத்தில் அவருடைய இறைவனைப் பற்றித் தர்க்கம் செய்தவனை (நபியே!) நீர் கவனித்தீரா? இப்ராஹீம் கூறினார்: "எவன் உயிர் கொடுக்கவும், மரணம் அடையும்படியும் செய்கிறானோ, அவனே என்னுடைய ரப்பு(இறைவன்)" என்று; அதற்கவன், "நானும் உயிர் கொடுக்கிறேன்; மரணம் அடையும் படியும் செய்கிறேன்" என்று கூறினான்; (அப்பொழுது) இப்ராஹீம்





கூறினார்: "திட்டமாக அல்லாஹ் சூரியனைக் கிழக்கில் உதிக்கச் செய்கிறான்; நீ அதை மேற்குத் திசையில் உதிக்கும்படிச் செய்!" என்று (அல்லாஹ்வை) நிராகரித்த அவன், திகைத்து வாயடைப்பட்டுப் போனான்; தவிர, அல்லாஹ் அநியாயம் செய்யும் கூட்டத்தாருக்கு நேர் வழி காண்பிப்பதில்லை.

2:259 أَوْ كَالَّذِي مَرَّ عَلَىٰ قَرْيَةٍ وَهِيَ خَاوِيَةٌ عَلَىٰ عُرُوشِهَا قَالَ أَنَّىٰ يُحْيِي هَٰذِهِ اللَّهُ بَعْدَ مَوْتِهَا ۖ فَأَمَاتَهُ اللَّهُ
مِائَةَ عَامٍ ثُمَّ بَعَثَهُ ۖ قَالَ كَمْ لَبِثْتَ ۖ قَالَ لَبِثْتُ يَوْمًا أَوْ بَعْضَ يَوْمٍ ۖ قَالَ بَلْ لَبِثْتَ مِائَةَ عَامٍ فَانْظُرْ إِلَىٰ طَعَامِكَ
وَشَرَابِكَ لَمْ يَتَسَنَّهْ ۖ وَانْظُرْ إِلَىٰ حِمَارِكَ وَلِنَجْعَلَكَ آيَةً لِلنَّاسِ ۖ وَانْظُرْ إِلَى الْعِظَامِ كَيْفَ نُنْشِزُهَا ثُمَّ نَكْسُوهَا
لَحْمًا ۚ فَلَمَّا تَبَيَّنَ لَهُ قَالَ أَعْلَمُ أَنَّ اللَّهَ عَلَىٰ كُلِّ شَيْءٍ قَدِيرٌ

2:259. அல்லது, ஒரு கிராமத்தின் பக்கமாகச் சென்றவரைப் போல் - (அந்த கிராமத்திலுள்ள வீடுகளின்) உச்சிகளெல்லாம் (இடிந்து, விழுந்து) பாழடைந்து கிடந்தன; (இதைப் பார்த்த அவர்) "இவ்வூர் (இவ்வாறு அழிந்து) மரித்தபின் இதனை அல்லாஹ் எப்படி உயிர்ப்பிப்பான்?" என்று (வியந்து) கூறினார்; ஆகவே, அல்லாஹ் அவரை நூறாண்டுகள் வரை இறந்து போகும்படிச் செய்தான்; பின்னர் அவரை உயிர்பெற்றெழும்படிச் செய்து, "எவ்வளவு காலம் (இந்நிலையில்) இருந்தீர்?" என்று அவரைக் கேட்டான்; அதற்கவர், "ஒரு நாள் அல்லது ஒரு நாளின் சிறு பகுதியில் (இவ்வாறு) இருந்தேன்" என்று கூறினார்; "இல்லை நீர் (இந்நிலையில்) நூறாண்டுகள் இருந்தீர்! இதோ பாரும் உம்முடைய உணவையும், உம்முடைய பானத்தையும்; (கெட்டுப் போகாமையினால்) அவை எந்த விதத்திலும் மாறுதலடையவில்லை; ஆனால் உம்முடைய கழுதையைப் பாரும்; உம்மை மனிதர்களுக்கு ஓர் அத்தாட்சியாக்குவதற்காக (இவ்வாறு மரணிக்கச் செய்து உயிர் பெறச் செய்கிறோம்; இன்னும் (அக்கழுதையின்) எலும்புகளைப் பாரும்; அவற்றை நாம் எப்படிச் சேர்க்கிறோம்; பின்னர் அவற்றின்மேல் சதையைப் போர்த்துகிறோம்" எனக்கூறி (அதனை உயிர் பெறச் செய்தான்- இதுவெல்லாம்)

# KURAN



அவருக்குத் தெளிவான போது: அவர், "நிச்சயமாக அல்லாஹ் எல்லாப் பொருள்களின் மீதும் வல்லமையுடையவன் என்பதை நான் அறிந்து கொண்டேன்" என்று கூறினார்.

2:260 قَالَ أَوَلَمْ تُؤْمِنْ ۖ الْمَوْتَىٰ تُحْيِ كَيْفَ أَرِنِي رَبِّ إِبْرَاهِيمُ قَالَ وَإِذْ قَلْبِي لِيَطْمَئِنَّ وَلَٰكِنْ بَلَىٰ قَالَ فَخُذْ ۖ
أَرْبَعَةً سَعْيًا يَأْتِينَكَ ادْعُهُنَّ ثُمَّ جُزْءًا مِنْهُنَّ جَبَلٍ كُلِّ عَلَىٰ اجْعَلْ ثُمَّ إِلَيْكَ فَصُرْهُنَّ الطَّيْرِ مِنَ ۚ اللَّهَ أَنَّ وَاعْلَمْ
عَزِيزٌ حَكِيمٌ

2:260. இன்னும், இப்ராஹீம்: "என் இறைவா! இறந்தவர்களை நீ எவ்வாறு உயிர்ப்பிக்கிறாய் என்பதை எனக்குக் காண்பிப்பாயாக!" எனக் கோரியபோது, அவன்,"நீர் (இதை) நம்ப வில்லையா?" எனக் கேட்டான்; "மெய்(யாக நம்புகிறேன்!) ஆனால் என் இதயம் அமைதிபெறும் பொருட்டே (இவ்வாறு கேட்கிறேன்)" என்று கூறினார் "(அப்படியாயின்,) பறவைகளிலிருந்து நான்கைப்பிடித்து, (அவை உம்மிடம் திரும்பி வருமாறு) பழக்கிக்கொள்ளும்; பின்னர்(அவற்றை அறுத்து) அவற்றின் பாகத்தை ஒவ்வொரு மலையின் மீது வைத்து விடும்; பின், அவற்றைக் கூப்பிடும்; அவை உம்மிடம் வேகமாய்(ப் பறந்து) வரும்; நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவன், பேரறிவாளன் என்பதை அறிந்து கொள்ளும்" என்று (அல்லாஹ்) கூறினான்.


தொடரும்.....








சமூக சேவகர்
லார்ட்ஸ் மா.பால்ராஜ்
தலைவர் & நிறுவனர்




உ.த.மு.க
U.T.M.K

உலக தமிழர்கள் முன்னேற்ற கழகம்

100% ஊழலற்ற மக்களுக்கான சேவை அரசியல்

WWW.LORDSCLUBS.COM







**तस्मादज्ञानसम्भूतं हृत्स्थं ज्ञानासिनात्मनः ।**
**छित्त्वैनं संशयं योगमातिष्ठोत्तिष्ठ भारत ॥४२॥**

அஞ்ஞானத்தால் தோன்றி நெஞ்சில் நிலை
கொண்டிருக்கும் இந்த ஐயத்தை உன் ஞான
வாளால் அறுத்து யோக நிலை கொள். பாரத,
எழுந்து நில். 42

**इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां**
**योगशास्त्रे श्रीकृष्णार्जुनसंवादे**
**ज्ञानविभागयोगो नाम**
**चतुर्थोऽध्यायः ।**

இங்ஙனம் உபநிஷத்தும், பிரம வித்தையும் யோகசாஸ்த்ரமும் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்பாஷணையு மாகிய ஸ்ரீமத் பகவத் கீதையில் "ஞானயோகம்" என்ற நான்காம் அத்யாயம் முற்றிற்று.

---




# पञ्चमोऽध्यायः

## ஐந்தாம் அத்யாயம்.


### ஸம்ந்யாஸயோகம்.

अर्जुन उवाच—

संन्यासं कर्मणां कृष्ण
पुनर्योगं च शंससि ।
यच्छ्रेय एतयोरेकं
तन्मे ब्रूहि सुनिश्चितम् ॥ १ ॥

அர்ஜுனன் சொல்லுகிறன்—

கண்ணா, செய்கைகளின் துறவைப் புகழ்ந்து பேசுகிறாய்; பின்னர் அவற்றுடன் கலப்பதைப் புகழ்கிறாய். இவ்விரண்டில் எது வொன்று சிறந்த தென்பதை நன்கு நிச்சயப் படுத்தி என்னிடஞ் சொல்.






श्रीभगवानुवाच—


संन्यासः कर्मयोगश्च
निःश्रेयसकरावुभौ ।
तयोस्तु कर्मसंन्यासात्
कर्मयोगो विशिष्यते ॥ २ ॥

ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்—

துறவு, கர்மயோகம், இவ்விரண்டும் உயர்ந்த நலத்தைத் தருவன. இவற்றுள் கர்மத் துறவைக் காட்டிலும் கர்மயோகம் மேம்பட்டது. 2

ज्ञेयः स नित्यसंन्यासी
यो न द्वेष्टि न काङ्क्षति ।
निर्द्वन्द्वो हि महाबाहो
सुखं बन्धात्प्रमुच्यते ॥ ३ ॥

பகைத்தலும் விரும்புதலுமில்லாதவனை நித்ய ஸந்யாஸி யென்றுரைக்கக் கடவாய். பெருந் தோளுடையாய், இருமை நீங்கி அவன் எளிதில் பந்தத்தினின்று விடுபடுகிறான். 3







साङ्ख्ययोगौ पृथग्बालाः
प्रवदन्ति न पण्डिताः ।
एकमप्यास्थितः सम्यक्
उभयोर्विन्दते फलम् ॥ ४ ॥

ஸாங்க்யத்தையும் யோகத்தையும் வெவ்வே
றென்று சொல்வோர் குழந்தைகள்; பண்டிதர்
அங்ஙனம் கூறார். இவற்றுள் யாதேனு மொன்
றில் நன்கு நிலை பெற்றோன் இரண்டின் பயனை
யும் எய்துகிறான். 4

यत्साङ्ख्यैः प्राप्यते स्थानं
तद्योगैरपि गम्यते ।
एकं साङ्ख्यं च योगं च
यः पश्यति स पश्यति ॥ ५ ॥

ஸாங்க்யர் பெறும் நிலையையே யோகிகளும்
பெறுகிறார்கள். ஸாங்க்யத்தையும் யோகத்தை
யும் எவன் ஒன்றாகக் காண்பானோ, அவனே
காட்சி யுடையான். 5







संन्यासस्तु महाबाहो
दुःखमाप्तुमयोगतः ।
योगयुक्तो मुनिर्ब्रह्म
न चिरेणाधिगच्छति ॥ ६ ॥

பெருந் தோளாய், யோக மில்லாதவன் ஸந்யாஸம் பெறுதல் கஷ்டம். யோகத்தில் பொருந்திய முனி விரைவில் பிரமத்தை அடைகிறான். 6

योगयुक्तो विशुद्धात्मा
विजितात्मा जितेन्द्रियः ।
सर्वभूतात्मभूतात्मा
कुर्वन्नपि न लिप्यते ॥ ७ ॥

யோகத்திலே மருவித் தூய்மை யுற்றோன், தன்னைத் தான் வென்றோன், இந்திரியங்களின் மீது வெற்றி கொண்டோன், எல்லா உயிர் களுந் தானே யானவன்—அவன் தொழில் செய்து கொண்டிருப்பினும் அதில் ஒட்டுவ தில்லை. 7





नैव किंचित्करोमीति
युक्तो मन्येत तत्त्ववित् ।
पश्यञ्शृण्वन्स्पृशञ्जिघ्र-
न्नश्नन्गच्छन्स्वपञ्श्वसन् ॥ ८ ॥

உண்மை யறிந்த யோகி "நான் எதனையுஞ் செய்வதில்லை" என்றெண்ணக் கடவான், காண்கினும், கேட்கினும், தீண்டினும், மோப்பினும், உண்பினும், நடப்பினும், உயிர்ப்பினும், உறங்கினும், 8

प्रलपन्विसृजन्गृह्ण-
न्नुन्मिषन्निमिषन्नपि ।
इन्द्रियाणीन्द्रियार्थेषु
वर्तन्त इति धारयन् ॥ ९ ॥

புலம்பினும், விடினும், வாங்கினும், இமைகளைத் திறப்பினும் மூடினும், எதிலும் "இந்திரியங்கள் தம்முடைய விஷயங்களில் சலிக்கின்றன" என்று கருதி யிருக்கக் கடவான். 9.

தொடரும்.....



# Govt. tells non-essential staff to work from home to save fuel; social media saw many accounts of families being unable to access emergency medical care due to the lack of fuel

Sri Lanka has decided to seek fresh assistance of $500 million from India to augment its fuel imports, as the island reels under a crippling economic crisis manifesting in persisting shortages of essentials.

For weeks now, citizens are spending long hours lining up outside fuel stations — at times all day or night — to pump petrol or diesel, currently in short supply, as crisis-hit Sri Lanka runs out of dollars to pay for imports.
Public transport has been stalled due to the unavailability of fuel, businesses have been hit, and schools were forced to remain closed as students are unable to commute. Over the last few days, Sri Lankan social media saw many accounts of families being unable to access emergency medical care due to the

lack of fuel. The government has asked "non-essential" staff to work from home, to save on fuel consumption.

"The Cabinet of Ministers granted approval for the proposal submitted by the Minister of Electricity and Energy to obtain a series of short-term loan facilities worth another $500 million with the assistance of the export–import bank of the Indian government in order to purchase petroleum products required by the country settling the foreign exchange shortage existing at the moment," the government said in a statement following the Cabinet meeting on Monday.

Fuel prices saw a record hike on Tuesday as diesel, earlier sold for LKR 289 ($0.80) a litre, now costs LKR 400, reflecting a 38 % jump. Petrol prices rose from 338 to 420 Sri Lankan rupees, threatening to further increase costs of all essential commodities whose prices are already skyrocketing.

For several months now, Sri Lanka has been amidst an unprecedented economic downturn, sparking street protests by citizens across the country. A group of demonstrators are camping outside the Presidential Secretariat in Colombo for 46 days in a row, demanding that President Gotabaya Rajapaksa, who they hold chiefly responsible, quit office.

Amid a heightening crisis, the government announced last month that it would pre-emptively default on the country's foreign debt totalling $51 billion as the "last resort", and is currently negotiating a package with the International Monetary Fund. However, Central Bank Governor Nandalal Weerasinghe on Monday noted that it was difficult to give a timeline of Sri Lanka's economic recovery that, he said, was contingent on the success of the measures taken by the government.

Much of Colombo's initiatives so far have been about tapping external help from bilateral partners and multilateral lenders. India has already extended credit lines worth $700 million so far for fuel imports —as part of the total $3.5 billion assistance extended so far since January — and delivered over 5 lakh MT of fuel, including the latest shipment of 40,000 tonnes of petrol that reached Colombo on Monday. Meanwhile, the government is also considering various options to expand Sri Lanka's domestic energy sector, including with foreign investment. Minister of Power and Energy Kanchana Wijesekera on Tuesday announced plans to advertise plots for studies on oil exploration in the Mannar Basin, where Cairn India was earlier involved in exploration.



The task of getting 20 million tons of foodgrains in Ukrainian silos out of Ukraine is being taken up by the European Union. Ms. Leyen of the EU has emphasized the importance of this mission for poor countries. About 50 countries depend on Ukraine and Russia for over 30% of imports of foodgrains says the WSJ. One way supported in this WSJ Editorial Board opinion is to use naval ships to escort ships carrying grain out of Black Sea ports. This requires Turkey's support and has to be ...



How to know where inflation is headed is shown here in charts in the WSJ. One has to look at the charts for oil and energy costs, automobile costs which are about one fifth of the inflation, retail prices, travel costs, expectations that drive prices. As the pressures decrease for demand for goods in 2022 following a pandemic induced increase in demand the inflation is driven largely by energy and automobiles costs. Amazon is renting out the extra space that it does not need in warehou ...

# தமிழ்
# உலகமொழி




உலகிலேயே தமிழ் மொழி தான் முதல் மொழி. 247 தமிழ் எழுத்துக்களில் இருந்து சுருக்கமாக்கப்பட்டு உருவாக்கப்பட்டதுதான் 26 ஆங்கில எழுத்துக்கள் ஆகும்.

தமிழ் எழுத்துக்களும் ஆங்கில எழுத்துக்களும் கலந்த உருவாக்கப்பட்டது தான் ஹிந்தி எழுத்துக்கள் ஆகும். தமிழ் எழுத்துக்களும் ஹிந்தி எழுத்துக்களும் கலந்து எழுதப்பட்டவை தான் தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய எழுத்துக்கள் ஆகும்.

இதை நீங்கள் எழுதி பழகி பயின்று பார்த்தால் உங்களுக்கும் தெளிவாக புரியும்.

உலகில் உள்ள அனைத்து மொழிகளுக்கும் தாய் மொழி தமிழ் மொழிதான் தமிழ் மொழி உலகம் தோன்றிய முதல் மனிதன் ஆதாம் ஏவாள் தோன்றிய காலத்தில் இருந்து இன்றுவரையில் அழிக்கப்படாமல் இருப்பதற்கு தாயையும் தாய்மொழியான தமிழையும் பனைமரம் ஏறுதல் குலதொழில்களையும் மறக்காத தமிழர்களாகிய எங்களின் முன்னோர்களும் நாங்களும் தான் முழு காரணம் என்பதனை உலக மனிதர்கள் அனைவரும் அறியவேண்டும்.

மேலும் தமிழ் மொழியை உலக மொழியாக உலக நாடுகள் அறிவிக்க வேண்டும் என்று லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் சார்பாக உலக நாடுகளுக்கு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

அன்புடன்,

**லார்ட்ஸ் ம.பால்ராஜ்**
சர்வதேச தலைவர்
**LORDS CLUBS INTERNATIONAL**
Govt. Reg. No. : 1359/2013
Ct. No. : +91 9840559673 | +91 9790855633
Web : www.lordsclubs.com
E-mail : lordsclubsinternational@gmail.com

**ம.பால்ராஜ்**
Founder | International President

